21.10.2016

தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## மண் பரிசோதனை: வேளாண் துறை அறிவுறுத்தல்



பல்லடம், பொங்கலூர் பகுதிகளில் விதைப்புப் பணியில் விவசாயிகள் ஆர்வம் காட்டிவருகின்றனர்.

பல்லடம், பொங்கலூர் பகுதிகளில் மானாவாரி நிலங்களில் புரட்டாசிப் பட்டத்தில் கம்பு, சோளம், கொள்ளு மற்றும் கால்நடைத் தீவனப் பயிர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகின்றன. ஆவணி, புரட்டாசி மாதங்களில் விதைப்புப் பணிகள் முடிந்து விடும். ஆனால், இந்த ஆண்டு ஆவணி, புரட்டாசி மாதங்களில் மழை

பெய்யாததால் விவசாயிகள் ஏமாற்றமடைந்துள்ளனர். இந்நிலையில், கடந்த சில நாள்களுக்கு முன் பெய்த பலத்த மழையினால் விவசாயிகளுக்கு நம்பிக்கையை ஏற்பட்டுள்ளது.

தற்போது, விதைப்புப் பணிகளில் விவசாயிகள் ஆர்வம் காட்டிவருகின்றனர். இதற்காக, விதை தானியங்கள் கொள்முதல் செய்து வருகின்றனர். சோளம், கம்பு, கொள்ளு உள்ளிட்ட விதை தானியங்கள் விற்பனை தற்போது சூடுபிடித்துள்ளது. இது குறித்து விவசாயிகள் கூறியதாவது:

மஞ்சள் சோளத்தட்டுகளைபோல பிற தீவனங்களை கறவை மாடுகள் நன்றாக சாப்பிடாது. பருவம் தவறி சாகுபடி செய்வதால் விளைச்சல் குறையவும், சோளப் பயிரின் வளர்ச்சி பாதிக்கவும் வாய்ப்புள்ளது. இதனால், அடுத்த ஆண்டில் கால்நடைத் தீவனப் பற்றாக்குறை ஏற்பட வாய்ப்புள்ளது என்றனர்.

## புதிய பயிர்க் காப்பீட்டுத் திட்டம்: விவசாயிகளுக்கு அழைப்பு

விவசாயிகள் புதிய பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் இணைய வேண்டுமென கடலூர் வேளாண்மை உதவி இயக்குநர் ஜி.முருகன் வேண்டுகோள் விடுத்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: நடப்பு 2016-17ஆம் ஆண்டில் பிரதமரின் புதிய பயிர்க் காப்பீட்டு திட்டத்தின் கீழ் அனைத்து முக்கியமான உணவுப் பயிர்கள், வணிகப் பயிர்கள், தோட்டப் பயிர்களை காப்பீடு செய்யலாம். இந்த புதியத் திட்டத்தில் விதைக்க, நடவு செய்ய இயலாத சூழ்நிலை, முளைத்து கருகியது, நடவு பொய்த்தல், பயிர் பருவ இடைக்கால இழப்பீடு, அறுவடைக்கு பிந்தைய இழப்புகள் ஆகிய நிகழ்வுகளுக்கு இழப்பீடு வழங்கப்படுகிறது. காப்பீட்டுத் தொகையானது அதிகபட்சமாக ஏக்கருக்கு நெல்லுக்கு ரூ.24,600, கரும்புக்கு ரூ.45 ஆயிரம், உளுந்துக்கு ரூ.12 ஆயிரம், நிலக்கடலைக்கு ரூ.2 ஆயிரம், கம்புக்கு ரூ.5 ஆயிரம், எள்ளுக்கு ரூ.6,300 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நடப்பு சம்பா பட்டத்தில் நெல் சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகள் ஏக்கருக்கு ரூ.369 வீதம் தங்கள் பகுதியில் உள்ள கிராம கூட்டுறவு வங்கி மற்றும் இதர வங்கிகளில் பயிர் செய்ததற்கான ஆவணங்களுடன் நவ.30ஆம் தேதிக்குள் செலுத்த வேண்டும். அனைத்து பயிர்களுக்கும் இதுபோன்று நிர்ணயிக்கப்பட்ட

பிரீமிய தொகை உரிய காலக்கெடுவுக்குள் செலுத்த வேண்டும். பயிர்க் கடன் பெறாத விவசாயிகளும் பயிர்க் காப்பீடு செய்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு வட்டார வேளாண்மை அலுவலர்கள், உதவி வேளாண்மை அலுவலர்களை அணுகலாம். எதிர்வரும் வடகிழக்குப் பருவ மழையை கருத்தில் கொண்டு விவசாயிகள் இத்திட்டத்தில் சேர்ந்து பயன்பெற வேண்டுமென அதில் கேட்டுக் கொண்டுள்ளார்.

**தினமலர்**

**இன்றைய வேளாண் செய்திகள்**

## நெல்லையில் மழை கலெக்டர் ஆலோசனை

திருநெல்வேலி நெல்லையில் நேற்று மாலையில் பலத்த மழை பெய்தது. திருநெல்வேலியில் இந்த ஆண்டு கடும் வறட்சி நிலவுகிறது. தென்மேற்கு பருவமழை போதிய அளவுபெய்யாததால் அணைகள், குளங்கள், நீர்நிலைகள் வறண்டுவிட்டன. கடந்த சில ஆண்டுகளில் அக்டோபர்துவக்கத்திலேயே வடகிழக்கு பருவமழை பெய்துவிட்டது. இந்த ஆண்டு மழையில்லாத நிலையில் நேற்று மாலையில்பலத்த மழை பெய்தது. பிற்பகல் 3 மணிக்கு துவங்கிய மழை மாலை 6 மணிவரையிலும் தொடர்ந்தது. குறிப்பாகபள்ளிகள் விடும் நேரத்தில் பெய்ததால் மாணவ, மாணவிகள் நனைந்தபடி சென்றனர். மழை காரணமாக நெல்லையில் இரவில் பல்வேறு இடங்களிலும் மின்சப்ளை பாதிக்கப்பட்டிருந்தது.மழை பெய்யத்துவங்கியுள்ளதையடுத்து கலெக்டர் கருணாகரன் தலைமையில் மழையை எதிர்கொள்வது குறித்துஅதிகாரிகளுடன் ஆலோசனை கூட்டம் நடந்தது.

படவிளக்கம்

நெல்லையில் நேற்று மாலையில் மழை பெய்ததால் பள்ளி முடிந்து செல்லும் மாணவர்கள் மழையில் நனைந்தபடி ஜாலியாக சென்றனர்.

**கீழ்பவானி வாய்க்கால் தூர்வாரும் பணி இன்றுடன் முடிவுக்கு வருது**

சென்னிமலை: கீழ்பவானி வாய்க்காலில், 60 ஆண்டுகளுக்குப் பிறகு, அறச்சலூர் முதல் சென்னிமலை வரை, 16 கி.மீ., தூரத்துக்கு தூர் வாரும் பணி, இன்றுடன் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பவானிசாகர் அணை கட்டிய பிறகு அணையில் இருந்து, 175 கி.மீ., தூரத்துக்கு வாய்க்கால் வெட்டப்பட்டு, பாசனத்துக்கு தண்ணீர் விடப்படுகிறது. பவானிசாகர் அணையில் இருந்து, 112 கி.மீ., தூரத்தில் அறச்சலூர் உள்ளது. இங்கு கீழ்பவானி வாய்க்கால் இரண்டாக பிரிகிறது. இதில் பிரதான வாய்க்கால், சென்னிமலை வழியாக திருப்பூர் மாவட்டத்தில் நுழைந்து மங்களபட்டியை அடைகிறது. கீழ்பவானி வாய்க்கால் வெட்டப்பட்டு, 60 ஆண்டுகளுக்கு மேலாகிறது. இதனால் பல இடங்களில் வாய்க்கால் பகுதிக்குள் மண் அதிகமாகி, தண்ணீர் செல்ல தடை ஏற்பட்டது. இதனால் கடைக்கோடி விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். அதனால் முதல் கட்டமாக, அறச்சலூரில் இருந்து, சென்னிமலை அருகே குன்னாங்காட்டுவலசு வரை, 16 கி.மீ., தூரத்துக்கு விவசாய அமைப்புகள் சார்பில் கீழ்பவானி வாய்க்காலை தூர் வார முடிவு செய்யப்பட்டது. அதன்படி தூர் வாரும் பணி கடந்த, 5ல் தொடங்கியது.

இந்தப் பணியில், விவசாய சங்கம் மற்றும் பாசன சபையில் உள்ள ஏழு சங்கங்களும் ஈடுபட்டுள்ளன. இதற்காக ஒவ்வொரு சங்கமும், 30 ஆயிரம் ரூபாய் வீதம், நிதி தந்துள்ளது. மொத்த செலவு, 10 லட்சம் ரூபாய் வரை ஆகலாம் எனத் தெரிகிறது. மீதி தொகையை சமூக ஆர்வலர்கள் மற்றும் விவசாயிகள் தருகின்றனர். வாய்க்காலில் படிந்து கிடந்த மண்ணைக் கொண்டு, கரைகள் பலப்படுத்தப்பட்டன. பவானிசாகர் அணையில் இருந்து, உயிர் திறப்புக்காக, கீழ்பவானி வாய்க்காலில் இன்று (22ம் தேதி) தண்ணீர் திறந்து விடப்படுகிறது. எனவே இன்று மாலைக்குள், தூர்வாரும் பணி முடிந்து விடும் என்று, பாசன விவசாயிகள் தெரிவித்தனர்.

**மண் வளம் பெருக்கவும் அரசு மானியம் உண்டு**

குஜிலியம்பாறை, 'விவசாய நிலங்களில் மண் வளத்தை பெருக்க அரசு மானியம் வழங்க உள்ளதாக' வேளாண் உதவி இயக்குநர் ராஜசேகர் தெரிவித்துள்ளார். அவர் கூறியிருப்பதாவது: வேளாண் நிலங்களில் தொடர்ச்சியாக விவசாயம் செய்து வருவதால், மண் சத்துக்கள் குறைந்து காணப்படும். இக்குறைகளை போக்கி நிலத்தை வளம் உள்ளதாக மாற்ற பசுந்தாள் உரம் இடவேண்டும். அதற்கு விவசாய நிலங்களில் தக்கைப்பூண்டு (அவரி), சணப்பை போன்ற பயிர்களை சாகுபடி செய்து, பூக்கும் தருவாயில் அப்படியே உழுதால் நிலத்திற்கு பசுந்தாள் உரம் கிடைக்கும். இவ்வாறு செய்யப்பட்ட நிலத்தில் சத்துக்கள் மிகுந்து, பயிர்கள் நன்கு வளர்ந்து மகசூல் அதிகரிக்கும். இதற்காக ஒரு எக்டேருக்கு ரூ.ஆயிரத்து 250 வீதம் பின்னேற்பு மானியமாக வழங்கப்படும். அதே போல் ஒரு எக்டேருக்கு 50 கிலோ விதையும், 50 சதவீத மான்யத்தில் வழங்கப்பட உள்ளது. இதுதொட்பான விபரங்களுக்கு வேளாண் விரிவாக்க அலுவலகங்களை தொடர்பு கொள்ளலாம் என, தெரிவித்துள்ளார்.

**கன மழை**

குஜிலியம்பாறை, ராமகிரி, கிழக்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் உள்ளது. இங்கு நேற்று முன்தினம் இரவு 11 மணிக்கு மேல், ராமகிரி, தளிப்பட்டி உள்ளிட்ட மலையடிவார பகுதிகளில் தொடர் மழை பெய்ததால் விவசாயிகள், மக்கள் மகிழ்சியில் உள்ளனர்.

**பயிர் காப்பீடு திட்ட தகவல் மையம் துவக்கம்**

அவலூர்பேட்டை: அவலூர்பேட்டையில், பிரதமரின் பயிர் காப்பீடு திட்ட தகவல் மைய துவக்க விழா நடந்தது.

அவலூர்பேட்டை வேளாண் துணை விரிவாக்க மையத்தில், பிரதமரின் பயிர் காப்பீடு திட்ட தகவல் மையம் துவக்கப்பட்டது.

வேளாண் உதவி இயக்குனர் பெரியசாமி தகவல் மையத்தை திறந்து வைத்து, அனைத்து விவசாயிகளும் நெல், கரும்பு, மணிலா, உளுந்து, மக்காச்சோளம், எள் உள்ளிட்ட பயிர்களுக்கு மானியத்தில் காப்பீடு செய்து கொள்ள அழைப்பு விடுத்தார். உதவி வேளாண் அலுவலர் வெங்கடேசன், தமிழ்மணி உடனிருந்தனர்.

இதில் விவசாயிகள் திரளாக கலந்து கொண்டனர். இதே போல்மேல்மலையனுாரிலும் தகவல் மையம் திறக்கப்பட்டது.

## விவசாய பணிகளுக்கு ஊக்கம் தந்த மழை

ஆண்டிபட்டி, ஆண்டிபட்டியில் ஒருவாரத்திற்குப்பின் மீண்டும் பெய்த மழை விவசாய பணிகளை துவங்க ஊக்கம் தந்துள்ளது.ஆண்டிபட்டியில் இந்தாண்டு தென்மேற்கு பருவமழை ஏமாற்றியதால், மானாவாரி, இறவை பாசன பணிகள் முடங்கின. கிணறுகள், 'போர்வெல்'கள் வற்றியதால் பல இடங்களிலும் குடிநீருக்கே அல்லாடும் நிலை ஏற்பட்டுள்ளது. ஆற்றில் நீர் வரத்து நின்று போனதால் ஆற்றின் கரையோர கிராமங்களும் கடும் பாதிப்புக்குள்ளாயின.
இந்நிலையில் கடந்த வாரம் ஆண்டிபட்டியில் பெய்த மழையால் நிலங்கள் குளிர்ந்தது. ஆங்காங்குள்ள சிறு பள்ளங்களில் நீர் தேங்கி நின்றது. பல இடங்களில் உழவு, விதைப்புப்பணிகள் துவக்கப்பட்டன. அதன்பின் கடந்த ஒரு வாரமாக வெயில் தாக்கம் அதிகரித்து மழைக்கான அறிகுறி குறைந்ததால், விவசாயிகள் மீண்டும் கலக்கம் அடைந்தனர். இந்நிலையில் நேற்று முன்தினம் மாலை ஆண்டிபட்டியில் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக மழை பெய்தது. குளங்கள், கண்மாய்களுக்கான நீர் வரத்து இல்லை என்றாலும், நிலத்தடிநீர் ஆதாரத்திற்கும், இயற்கை தீவனத்திற்கும் இருந்த பாதிப்பு குறைந்துள்ளது. இம்மழை விவசாய பணிகளுக்கு ஊக்கம் தந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

## விவசாயிகளுக்கு விளக்கம்

உத்தமபாளையம்: குள்ளப்புரம் வேளாண் தொழில்நுட்பக்கல்லுாரி மாணவிகள் அருணா, பெனிட்டா பிரிய தர்ஷினி, மீரா, பிரதனா, வேல்மணி, பெனாசிர், ஸ்ரீ தேவசேனா, மங்கையர்கரசி, பூர்ணலட்சுமி ஆகியோர் கிராம தங்கல் திட்டத்தின் கீழ் உத்தமபாளையத்தில் விவசாயிகளுக்கு நவீன தொழில்நுட்பங்களை விளக்கி கூறினர். மண்புழு கழிவு நீர் தயாரிப்பு, அதை பயன் படுத்தும் முறை பற்றி விவரித்தனர். இக்கழிவு நீரில் பல்வேறு சத்துக்களும், வளர்ச்சிக்கு தேவையான ஹார்மோன்களும் உள்ளதால் தாவரங்களின் வளர்ச்சியை ஊக்குவித்து மகசூலை அதிகரிப்பதாக தெரிவித்தனர்.

## எண்ணெய்களுக்கு மவுசு: மரச்செக்கு ஆலைகள் அதிகரிப்பு

சேலம்: மரச்செக்கில் ஆட்டப்படும் எண்ணெய்க்கு, மக்களிடையே மவுசு அதிகரித்துள்ளதால், சேலத்தில், மரச்செக்கு ஆலைகள் அதிகரித்து வருகின்றன.

நம் பாரம்பரியத்தில், மாடு பூட்டிய செக்குகளில் ஆட்டப்பட்ட எண்ணெய் வகைகளையே பயன்படுத்தி வந்தோம். நவீன இயந்திரங்களின் வருகையும், பதப்படுத்தும் வேதியியல் முறைகளும், எண்ணெய் வகைகளின் பயன்பாட்டையே மாற்றி அமைத்தன. சில ஆண்டுகளில், தமிழகத்தில் அதிகம் விளையும் கடலை எண்ணெய், நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய் ஆகியவற்றை மறந்து, சுத்திகரிக்கப்பட்ட சூரியகாந்தி எண்ணெய், தவிட்டு எண்ணெய் என, சமையல் எண்ணெய் பயன்பாடு தடம் மாறி போனது. இதனால், மரச்செக்கு மூலம் எண்ணெய் ஆட்டி வந்த ஆலைகள், நஷ்டத்தில் ஓட துவங்கின. பெரும்பாலான செக்கு ஆலைகள் மூடப்பட்டன. சமீப காலமாக சமூக வலைதளங்கள் மூலம் மரச்செக்கினால் ஆட்டப்படும் எண்ணெய் பயன்கள் குறித்த, வழிப்புணர்வு அதிகரித்து வருகிறது. இதனால், பலரும் மரச்செக்கு எண்ணெய், சமையலுக்கு பயன்படுத்த துவங்கியுள்ளனர். ஆங்காங்கே இருந்த ஒன்றிரண்டு ஆலைகள், பிசியாகின. புதிய ஆலைகளும் உருவாகின்றன.

சேலம், செவ்வாய்பேட்டையை சேர்ந்த வணிகர் ஆறுமுகம் கூறியதாவது: மிஷின் மூலம் தயாரிக்கப்படும் எண்ணெய், பதப்படுத்த, வேதியியல் பொருட்களை கலக்கும் எண்ணையும் பல்வேறு பக்கவிளைவுகளை ஏற்படுத்துகிறது என, மருத்துவர்கள் வெளிப்படையாக பேச துவங்கியுள்ளனர். இதனால், சூடாகாமல் எடுக்கும் முறையான மரச்செக்கில் ஆட்டப்படும் எண்ணெய் பயன் குறித்து, விழிப்புணர்வு ஏற்படுகிறது. இதனால், விலை குறித்து கவலைப்படாமல், மரச்செக்கு எண்ணெய் வாங்க, மக்கள் ஆர்வம் காட்டுகின்றனர். சூப்பர் மார்க்கெட் போன்ற இடங்களிலும், தற்போது மரச்செக்கு எண்ணெய் விற்பனைக்கு கிடைக்கிறது. மரச்செக்கில் ஆட்டப்பட்ட கடலை எண்ணெய் லிட்டர், 170 ரூபாய்

வரையும், நல்லெண்ணெய் மற்றும் தேங்காய் எண்ணெய், 280 ரூபாய் வரையும் விற்கப்படுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

## வேளாண் சேவை மையம் துவக்கம்

கொளத்தூர்: மத்திய அரசு உரத்துறை வழிகாட்டுதல்படி, கிரின் ஸ்டார்(ஸ்பிக்) நிறுவனம் சார்பில், கொளத்தூரில், நேற்று வேளாண் சேவை மையம் துவக்க விழா நடந்தது. அதில், மாநில விற்பனை மேலாளர் அடைக்கலம், சேவை மையத்தை துவக்கி வைத்து பேசியதாவது: ஸ்பிக் சார்பில், தமிழகத்தில் முதல்முறையாக, கொளத்தூரில் வேளாண் சேவை மையம் துவங்கப்பட்டுள்ளது. மையம் மூலம், விவசாயிகளுக்கு மண் மற்றும் நீர் பரிசோதனை இலவசமாக செய்து தரப்படும். இந்த வாய்ப்பை, கொளத்தூர் விவசாயிகள் பயன்படுத்தி பலன்பெற வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

## விவசாயிகளுக்கு ஆலோசனை

நங்கவள்ளி: நங்கவள்ளி வட்டாரத்தில், வேளாண் தொழில்நுட்ப மேலாண் முகமையின் கீழ், நேற்று, பெரியசோரகையில், விதை கிராமத்திட்ட விவசாயிகளுக்கு, விதைப்பண்ணை அமைக்கல், அகன் பயன்கள் குறிக்க, தொழில்நுட்ப ஆலோசனை வழங்கப்பட்டது. வட்டார வேளாண் உதவி இயக்குனர் செந்தில்குமார் உள்பட, துறை அதிகாரிகள் பலர், விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கினர்.

## ரேஷன் கடையில் உளுந்து தட்டுப்பாடு அதிகரிப்பு

பள்ளிபாளையம்: குமாரபாளையம் தாலுகா ரேஷன் கடைகளில், உளுந்து, துவரம் பருப்பு தட்டுப்பாடு அதிகரித்து வருகிறது. குமாரபாளையம் தாலுகாவில், 105 ரேஷன் கடைகள் உள்ளன. அங்கு, அரிசி, சர்க்கரை, கோதுமை போன்ற அத்தியாவசிய பொருட்கள் தவிர, உளுந்து, துவரம் பருப்பு, பாமாயில் போன்ற பொருட்களும் வழங்கப்படுகின்றன. இதில், உளுந்து மற்றும் துவரம் பருப்பு வினியோகத்தில் தட்டுப்பாடு நிலவுகிறது. மாதத்தின் முதல் வாரத்தில், அனைத்து ரேஷன் கடையிலும், மக்கள் நீண்ட வரிசையில் நின்று, உளுந்து, துவரம் பருப்புகளை வாங்கிச் செல்கின்றனர். இருப்பு உள்ளவரை வழங்குகின்றனர். முதல்

வாரத்தில் வாங்கினால் தான் உண்டு. இல்லையெனில், அடுத்த மாதம் தான் கிடைக்கும். இதுகுறித்து, அதிகாரிகள் கூறுகையில், 'உளுந்து, துவரம் பருப்பு வரத்து குறைவாகத்தான் வருகிறது. அதற்கு தகுந்தவாறு மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இந்த மாதம் வாங்காதவர்களுக்கு, அடுத்த மாதம் முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படுகிறது' என்றனர்.

## பிரதம மந்திரி பயிர் காப்பீடு திட்டம் குறித்த ஆய்வு கூட்டம்

தர்மபுரி: தர்மபுரி கலெக்டர் அலுவலகத்தில், பிரதம மந்திரி பயிர் காப்பீடு திட்டம் குறித்த ஆய்வுக் கூட்டம் கலெக்டர் விவேகானந்தன் தலைமையில் நடந்தது. அதில் அவர் பேசியதாவது: தர்மபுரி மாவட்ட வேளாண்மைத்துறை மூலம், பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டம், நடப்பு ரபீ பயிர்களுக்கு செயல்படுத்தப்பட உள்ளது. இதன் மூலம், விவசாயிகளுக்கு உற்பத்தி இழப்பு ஏற்படுவதை தடுப்பதும், நவீன தொழில்நுட்பங்களை விவசாயிகள் மத்தியில் கொண்டு சேர்க்கப்படும். இத்திட்டம் நடைமுறையில் உள்ள பகுதிகள் மற்றும் பரிந்துரை செய்யப்பட்ட பயிர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்கு, பயிர் கடன் பெறாத விவசாயிகள் பயன்பெறலாம். இதில் விதைப்பு தவிர்த்தல், விதைப்பு செய்யாத நிலை, வறட்சி மற்றும் வெள்ளத்தினால் ஏற்படும் பாதிப்புகளுக்கு பயிர் காப்பீடு செய்யலாம். இந்த திட்டத்தில், அனைத்து வகையான உணவு தானியங்கள், பயிறு, எண்ணை வித்து பயிர்கள், கரும்பு, பருத்தி உள்ளிட்டவைகளுக்கு ரபீ பருவத்தில், 1.5 சதவீதம் காப்பீடு தொகையும், தோட்டக்கலைத்துறை பயிர்களுக்கு, 5 சதவீதமும் காப்பீடு தொகை விவசாயிகள் செலுத்த வேண்டும். மேலும், அறுவடை காலத்தில் ஏற்படும் பாதிப்புக்களுக்கும், பயிர் காப்பீடு செய்து பயன்பெறலாம். தற்போது நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள், வரும் நவம்பர், 30ம் தேதிக்குள் காப்பீடு செய்து பயன்பெறலாம். இவ்வாறு பேசினார். வேளாண்மை இணை இயக்குனர் ராஜேந்திரன், வேளாண்மை துணை இயக்குனர் வெங்கடேசன் உட்பட பலர் பங்கேற்றனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

## முட்டை விலை ஒரே நாளில் 16 காசு உயர்வு




நாமக்கல்: நாமக்கல்லில் தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு கூட்டம் நேற்று நடந்தது. இதில் ஒரே நாளில் முட்டை விலையில் 16 காசுகள் உயர்த்தப்பட்டது. அதன்படி ஒரு முட்டையின் பண்ணை கொள்முதல் விலை 381 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது.

## கரும்பு மகசூல் பெருக்க திட்ட செயல் விளக்கம்

செஞ்சி, : செஞ்சி அடுத்த செம்மேடு ராஜ்ரீ சர்க்கரை ஆலை வளாகத்தில் கரும்பு மகசூல் பெருக்க திட்டம் குறித்து பயிற்சி நடந்தது. இதில் மேலாளர் வெற்றிவேல்(கரும்பு), விரிவாக்க மேலாளர் வெங்கடேச பெருமாள், விரிவாக்க அலுவலர்கள் அய்யப்பன், அருள்ஜோதி, பயிற்சி அலுவலர் வித்யா ஆகியோர் பயிற்சி அளித்தார். இதில் ஆழ்உழவு, விதை கரும்பின் முக்கியத்துவம், சொட்டு நீர்

பாசனம், நிழல்வலை மூலம் செதில் நாற்று நடவு, இயற்கை இடுபொருட்கள், உயிர் உரங்கள் இடுதல், பூச்சியியல் மேலாண்மை, களை கட்டுப்பாடு குறித்து செயல்வழி விளக்கங்கள் அளித்தனர். இதில் 20க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## வேளாண் அறிவியல் நிலையத்தில் கால்நடை தீவன தயாரிப்பு பயிற்சி

நாமக்கல்: வேளாண் அறிவியல் நிலைய இணைப்பேராசிரியரும், தலைவருமான அகிலா வெளியிட்ட அறிக்கை: நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் 26ம் தேதி காலை 9 மணிக்கு கால்நடை மற்றும் கோழி இனங்களுக்கான அடர் தீவனம் தயாரிக்கும் முறைகள் என்ற தலைப்பில் இலவச பயிற்சி நடக்கிறது. இதில் கறவைமாடு, வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகளுக்கான தீவன மேலாண்மை, தீவன அளவுகள் மற்றும் சொந்தமாக தீவனம் தயாரிக்கும் முறைகள் குறித்த பயிற்சி விரிவாக கற்றுத்தரப்படும்.

இப்பயிற்சியில் விவசாயிகள், பண்ணையாளர்கள், ஊரக மகளிர், இளைஞர்கள் மற்றும் ஆர்வமுள்ளவர்கள் பங்கேற்கலாம். பங்கேற்க விரும்புவோர், வேளாண் அறிவியல் நிலையத்தில் 25ம் தேதிக்குள் தங்களது பெயரை முன்பதிவு செய்து கொள்ளலாம்.இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## பயிர் காப்பீடு திட்டத்தில் சேர விவசாயிகளுக்கு அழைப்பு

தர்மபுரி: தர்மபுரி வேளாண்மை இணை இயக்குனர் அலுவலகத்தில் பிரதம மந்திரி பயிர் காப்பீடு திட்டம் குறித்து ஆய்வுக்கூட்டம் நேற்று நடந்தது. கூட்டத்தில் கலெக்டர் விவேகானந்தன் பேசியதாவது: தர்மபுரி மாவட்டத்தில் வேளாண்மைத் துறை மூலம், வேளாண்மையில் நிலையான உற்பத்திக்காக நடப்பு ரபீ பயிர்களுக்கு பயிர் காப்பீடு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

விவசாயிகளுக்கு நிலையான வருமானம் கிடைக்க செய்தல், நவீன வேளாண்மை தொழில்நுட்பங்களை கடைப்பிடிக்க ஊக்குவித்தல், உற்பத்தி இழப்பு ஏற்படும் அபாயத்திலிருந்து பாதுகாத்தல் போன்றவை இத்திட்டத்தின் அம்சங்கள் ஆகும். பயிர்கடன் பெறாத விவசாயிகள், தங்கள் விருப்பத்தின் பேரில் இத்திட்டத்தில் சேரலாம். விதைப்பு தவிர்த்தல், விதைப்பு தோல்வியடைதல் மற்றும் பயிர் வறட்சி மற்றும் வெள்ளத்தினால் ஏற்படும் பாதிப்புகளுக்கு பயிர் காப்பீடு செய்யலாம்.

அனைத்து உணவு தானிய பயிர்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள், பருத்தி மற்றும் கரும்பு பயிர்களுக்கு ரபீ பருவத்தில் 1.5 சதம் காப்பீடு தொகையும், ஆண்டு வணிக பயிர்கள் மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கு 5 சதம் காப்பீடு தொகையும் செலுத்த வேண்டும். அறுவடை சமயத்தில் ஏற்படும் மகசூல் இழப்பிற்கும் பயிர் காப்பீடு செய்யலாம். இதன்படி தற்போது நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் இத்திட்டத்தில் நவம்பர் மாதம் 30ம் தேதிக்குள் இணைந்து பயன்பெறலாம்.

தற்போது வரை, கடன் பெறாத 1076 விவசாயிகள், கடன் பெற்ற 22 விவசாயிகள் இத்திட்டத்தில் இணைந்துள்ளனர். மேலும் இத்திட்டத்தை விவசாயிகள் எளிதாக அறிந்துகொள்ளும் வண்ணம், வேளாண்மை விரிவாக்க மையம், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி, நியாய விலைக்கடை மற்றும் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் ஆகிய இடங்களில், இத்திட்டம் தொடர்பான விளம்பர பலகை அமைக்க வேண்டும். இவ்வாறு கலெக்டர் பேசினார்.

இக்கூட்டத்தில் வேளாண்மை இணை இயக்குனர் ராஜேந்திரன், பொது மேலாளர் மத்திய கூட்டுறவு வங்கி குணசேகரன், உதவி மேலாளர், நியூ இந்தியா அஸ்யூரன்ஸ் புகழேந்தி, வேளாண்மை துணை இயக்குநர் (மாநில திட்டம்) வெங்கடேசன், வேளாண்மை துணை இயக்குநர் (மத்திய திட்டம்) சேனாபதி மற்றும் வேளாண்மை அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

## நெற்பயிரில் புகையான் தாக்குதல் அதிகரிப்பு : தடுக்கும் வழிமுறைகள்

கிருஷ்ணகிரி: நெல்லில் புகையான் மேலாண்மை குறித்து வேளாண்மை அறிவியல் மைய ஒருங்கிணைப்பாளர் சுந்தர்ராஜ் வெளியிட்டுள்ள அறிக்கை: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், நடப்பு சம்பா பருவத்தில் சுமார் 6,500 எக்டர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் தற்போது புகையான் தாக்குதல் பரவலாக காணப்படுகிறது. இவற்றை தக்க சமயத்தில் கட்டுப்படுத்தாவிட்டால் பெருமளவில் மகசூல் இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

புகையான் பூச்சியின் முட்டை பழுப்பு நிறத்திலும், பூச்சிகள் பழுப்பு அல்லது சாம்பல் நிறத்திலும் காணப்படுகிறது. குத்துகளின் அடிபாகத்தில் நீர் பகுதிக்கு மேலே இருந்து, தண்டில் உள்ள சாற்றினை உறிஞ்சி விடுவதால், பயிரின் மேற்பகுதி முதலில் மஞ்சள் நிறமாகி, பின்னர் பழுப்பு நிறமாகிவிடும். இப்பூச்சியினால் பாதிக்கப்பட்ட வயல்கள் ஆங்காங்கே எரிந்தது போல் வட்டவட்டமாக காணப்படும்.

நெல் புகையான் எதிர்ப்பு சக்தி ரகங்களான ஏடீடி 36, கோ 42, கோ 46 மற்றும் ஏஎஸ்டீ 18 போன்ற ரகங்களை தேர்வு செய்து, சரியான இடைவெளியில் நடவு செய்ய வேண்டும். மண் பரிசோதனை செய்து, தேவைக்கேற்ப உரமிட வேண்டும். வயல்களில் தழைச்சத்து அதிகம் இடுவதை தவிர்க்க வேண்டும். நெல்லுக்கு மேல் உரமாக யூரியாவை 3 முதல் 4 முறை பிரித்து இட வேண்டும். ஏக்கருக்கு 5 என்ற எண்ணிக்கையில் விளக்கப்பொறி அமைத்து தாய் அந்துப்பூச்சியின் நடமாட்டத்தினை அறிந்தும், கவர்ந்தும் அழிக்க வேண்டும். மேலும் நீரை நன்கு வடிகட்டி காய்ந்த பின் பாய்ச்சுதல் வேண்டும்.

மேலும் வேப்பங்கொட்டை கரைசல் 5 சதம் அல்லது 46 லிட்டர் வேப்ப எண்ணையை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து பயிர்களின் அடிப்பாகத்தில் தெளித்து கட்டுப்படுத்த வேண்டும்.புகையானின் தாக்குதல் சேதநிலையினை கடக்கும் போது டைகுளோர்வாஸ் 120 மில்லி அல்லது குளோதயாநிடினின் 50 டபிள்யூ டீ ஜி 25 கிராம் அல்லது பிப்ரோபேசின் 25 எஸ்சி 320 மில்லி அல்லது இமிடாகுளோப்ரிட் 200 எஸ் எல் 50 மில்லி அல்லது இமிடாகுளோப்ரிட் 17.8 எஸ் எல் 100 மில்லி அல்லது தயாமிதாக்சாம் 25 டவிள்யூ ஜி 40 மில்லி அல்லது தயோகுளோப்ரிட் 240 எஸ்சி 200 மில்லி இவற்றில் ஏதேனும் ஒன்றை ஒரு ஏக்கருக்கு 200 லிட்டர் தண்ணீரில் கலந்து பூப்பதற்கு முன்பாக தெளித்துக் கட்டுப்படுத்தலாம். இதன் மூலம் புகையான் தாக்குதலில் இருந்து நெற்பயிரை பாதுகாக்கலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் மஞ்சள் வரத்து அதிகரிப்பு

கோவை, : கோவை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நேற்று மாலை நடந்த மஞ்சள் ஏலத்தில் விரலி ரகம் 140 குவின்டாலும், கிழங்கு ரகம் 40 குவின்டாலும் என மொத்தம் 180 குவின்டால் விற்பனையானது. நாதேகவுண்டன்பாளையம், சென்னனூர், இருட்டுப்பள்ளம் பகுதியை சேர்ந்த விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதை கோவை, பொள்ளாச்சி பகுதியை சேர்ந்த வியாபாரிகள் கொள்முதல் செய்தனர்.

விலை விரலி மஞ்சள் குவின்டால் ரூ.7,926 முதல் ரூ.8,200 வரை விற்றது. இதன் சராசரி விலை ரூ.8,100. விற்பனை மதிப்பு ரூ.11.34 லட்சம். கிழங்கு மஞ்சள் குவின்டால் ரூ.7,299 முதல் ரூ.7,426 வரை விற்றது. இதன் சராசரி விலை ரூ.7,350. விற்பனை மதிப்பு ரூ.2.94 லட்சம். இரண்டு ரகமும் சேர்ந்து ரூ.14.28 லட்சத்திற்கு விற்றது. கடந்த இரண்டரை மாதங்களாகவே மஞ்சள் சராசரி விலை குவின்டால் ரூ.9 ஆயிரத்திற்கு கீழ் சரிந்த நிலையிலேயே உள்ளது. எனினும், கடந்த ஏலத்தை காட்டிலும் வரத்து 120 குவின்டால் அதிகரித்துள்ளது.

## ரூ.28 லட்சத்துக்கு கொப்பரை ஏலம்

வெள்ளக்கோவில், : வெள்ளக்கோவில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் வாரம்தோறும் கொப்பரை ஏலம் நடந்து வருகிறது. இந்த வாரம் ரூ.28 லட்சத்து 45 ஆயிரத்து 870 மதிப்புள்ள 52 ஆயிரத்து 450 கிலோ கொப்பரை விற்பனைக்கு கொண்டு வரப்பட்டது.இவைஅதிகபட்சமாக ஒரு கிலோ ரூ.61.40க்கும், குறைந்தபட்சம் ரூ.41.05க்கும் ஏலம் போனது. விவசாயிகள் தங்கள் விளைபொருள்களை விற்பனைக்கூடத்துக்கு கொண்டு வந்து பயன்பெறுமாறு விற்பனைக்கூட நிர்வாக அலுவலர் கேட்டுக்கொண்டுள்ளார்.

**திருச்சியில் இடியுடன் பலத்த மழை 291 மி.மீ மழை பதிவு**

திருச்சி: திருச்சியில் இடியுடன் பலத்த மழை பெய்ததில் 291 மி.மீ மழை பதிவானது. வங்க கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி உள்ளது. இதன் காரணமாக தமிழகத்தில் பல இடங்களில் மழை பெய்தது. திருச்சியில் நேற்று முன்தினம் நள்ளிரவு இடியுடன் பலத்த மழை பெய்தது. இதனால் மத்திய பஸ்நிலையம், இனாம்குளத்தூர் பஸ் நிறுத்தம், கொட்டப்பட்டு இந்திரா நகர், டோல்கேட் சந்தை உள்ளிட்ட இடங்களில் தாழ்வாழ் இடங்களில் மழை நீர் குளம் போல் தேங்கியுள்ளது.

சாலையோரங்களில், தாழ்வான இடங்களில் மழைநீர் தேங்கி குளமாக காட்சியளித்தது. மழையால் நள்ளிரவு மின்தடை ஏற்பட்டது.இதேபோல் சமயபுரம், புலிவலம், பெரமங்கலம், சிறுகுடி, லால்குடி உள்ளிட்ட இடங்களில் மழை பெய்தது. மண்ணச்சநல்லூரில் நேற்று காலை 8 முதல் 9 மணி வரை மழை பெய்தது. திருச்சி மாநகர் மற்றும் மணப்பாறை, துறையூர், லால்குடி, திருவெறும்பூர் உள்ளிட்ட பகுதி களில் நேற்று மழை அறிகுறியுடன் மேகமூட்டத்துடன் காணப்பட்டது.

அதிகாலை முதல் 9 மணி வரை பனிமூட்டமாக காணப்பட்டது. திருச்சி மாவட்டத்தில் மொத்தம் 291 மி.மீ மழை பதிவாகியுள்ளது. அதிக பட்சம் சமயபுரத்தில் 54 மி.மீ, நவலூர் கொட்டப்பட்டு , தா.பேட்டையில் தலா 2 மி.மீ மழை பெய்துள்ளது. நேற்று முன்தினம் பெய்த மழை அளவு(மி.மீ) விபரம்: லால்குடி 40.50, முசிறி 6.20, ஏர் போர்ட் 9.80, திருச்சி டவுன் 32, பொன்னையார் அணை 8, வாத்தலை அணைக்கட்டு 40.50, தேவிமங்கலம் 30, சிறுகுடி 21, புலிவலம் 20, பொன்மலை 7, ஜங்ஷன் 18. சராசரி 11.64.

## கேரட் அறுவடைக்கு புதிய இயந்திரம்

ஊட்டி, : கேரட் பயிரை அறுவடை செய்யும் இயந்திரம் மற்றும் விதைப்பு இயந்திரம் கண்டுபிடித்துள்ளதாகவும், விரைவில் இந்த இயந்திரம் பயன்பாட்டிற்கு வரவுள்ளதாகவும் இந்திய மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு ஆண்டு விழாவில் விஞ்ஞானிகள் தெரிவித்தனர். நீலகிரி மாவட்டம் ஊட்டி அருகே தீட்டுக்கல் பகுதியில் இந்திய மண் மற்றும் நீர் வளப்பாதுகாப்பு நிறுவனம் உள்ளது. இந்த நிறுவனத்தின் 63வது ஆண்டு விழா நேற்று நடந்தது. முதன்மை விஞ்ஞானி மணிவண்ணன் வரவேற்றார். தலைவர் கோலா தலைமை வகித்தார். மாவட்ட கலெக்டர் சங்கர் தலைமை வகித்து விவசாயத்தில் புதிய தொழில் நுட்பங்களை பயன்படுத்திய கர்நாடக மாநிலம் தும்கூர் பகுதியை சேர்ந்த மகேஷ், கோவை பன்னிமடை பகுதியை சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி, நீலகிரி மாவட்டம் உபதலை பகுதியை சேர்ந்த சின்னப்பன் மற்றும் மீக்கேரி பகுதியை சேர்ந்த பாபு ஆகியோருக்கு கேடயம் மற்றும் சான்றிதழ்கள் வழங்கினார். விழாவில் கோவை மண்டல இந்திய மண் மற்றும் நீர்வள ஆராய்ச்சி மைய பொறியியல் துறை தலைவர் அண்ணாமலை சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பேசுகையில், இந்நிறுவனம் மண் மற்றும் நீர்வளங்களை பாதுகாக்க பல்வேறு ஆராய்ச்சிகளை மேற்கொண்டுள்ளது. நீலகிரி மாவட்டத்தில் கேரட், உருளைக்கிழங்கு உட்பட பல்வேறு மலை காய்கறிகளை பயிரிட்டு வருகின்றனர். கேரட் பயிரை அறுவடை செய்யும் மற்றும் விதைக்கும் இயந்திரத்தை கண்டு பிடித்துள்ளோம். விரைவில் இந்த இயந்திரம் பயன்பாட்டிற்கு வரும் என்றார். விழாவில், குன்னூர் பாஸ்டியர் ஆய்வக இயக்குனர் சேகர், வடக்கு வனப்பாதுகாவலர் கலாநிதி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**உரமிடுவதன் மூலம் தேயிலை மகசூல் அதிகரிக்கும்**

மஞ்சூர், : குந்தா மண்டல தேயிலை வாரிய உதவி இயக்குனர் ரமேஷ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, குந்தா பகுதியில் பரவலாக ஓரளவு மழை பெய்துள்ளது. பொதுவாக மழை பெய்தபின்பு மண்ணின் மேற்பரப்பில் போதுமான ஈரப்பதம் இருக்கும்போது தேயிலை செடிகளுக்கு உரமிட பரிந்துரை செய்யப்படுகிறது. தற்போது தழை மற்றும் சாம்பல் சத்து உரக்கலவை இட வேண்டும். நேரடி உரங்களை தனித்தனியாக வாங்கி, பரிந்துரை செய்யப்படும் அளவுகளில் தேயிலை செடிகளுக்கு இடுதல் மூலம் கணிசமான மகசூல் கிடைக்கும். குறிப்பாக தேயிலை செடிகளுக்கு உரமிடுவதற்கு முன் தோட்டத்தில் உள்ள களைகளை அகற்றுதல் வேண்டும். தொடர்ந்து உரங்களை வீச்சு முறையில் பரவலாக மண்ணில் துாவி விட வேண்டும். தற்போது ஒரு ஏக்கருக்கு தழை மற்றும் சாம்பல் சத்து உரங்களான யூரியா 60கிலோ மற்றும் மூரியேட் ஆப் பொட்டாஷ் 35கிலோ உரமிட பரிந்துரை செய்யப்படுகிறது. மேலும் சிறு விவசாயிகள் ஒரே சமயத்தில் அதிகளவு உரத்தினை தேயிலை செடிகளுக்கு இடுவதை தவிர்த்து வருடத்தில் 4முதல் 5முறை இடுவதன் மூலம் அதிகளவு மகசூல் பெற முடியும் என தெரிவித்துள்ளார்.